உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இராமலிங்க சுவாமிகள்

அருளிச்செய்த

# சிவநாமாவளித்திரட்டு.

KP.RM.RM
KAYAN



இவை

சென்னைப் புரசை

நாராயணசாமிப்பிள்ளை

அண்டு பிரதர் அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

---

விலை] · 1920. [அணா-2.

37, சரவணப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.

நம்பர் 883

உ
சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கப்,
திருவள்ளுவர் நூல் நிலையம்,
பாகனேரி.

இஃது
ஸ்ரீமான் அழ. சுப. சின்னய்யா செட்டியார் அவர்களால்
இனாமளிக்கப்பெற்றது.

ஆண்டு திங்கள் நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.



உ

சிவமயம்.

3816



திருச்சிற்றம்பலம்.

# சிவநாமாவளித்திரட்டு.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்

நேரிசை-வெண்பா.

முன்னவனேயானைமுகத்தவனேமுத்திநலஞ்
சொன்னவனேதூய்மெய்சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனேயைங்கரனேசெஞ்சடையஞ்சேகரனே
தற்பரனேநின்றருள்சரண்.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-ஆதிதாளம்

சிவசிவகஜமுககணநாதா
சிவகுணவர்த்திதகுணநீதா
சிவசிவசிவசிவதத்துவபோதா
சிவகுருபரசிவசண்முகநாதா
சிவசிவசிவசிவசின்மயதேஜா
சிவசுந்தரகுஞ்சிதநடராஜா.

அம்பலத்தரசேயருமருந்தே
யானந்தத்தேனேயருள்விருந்தே. 1
பொதுநடத்தரசேபுண்ணியனே
புலவரெலாம்புகழ்கண்ணியனே. 2
மலைதருமகளேமடமயிலே
மதிமுகவமுதேயிளங்குயிலே. 3
ஆனந்தக்கொடியேயிளம்பிடியே
யற்புதத்தேனேமலைமானே. 4
சிவசிவசிவசிவசின்மயதேஜா
சிவசுந்தரகுஞ்சிதநடராஜா. 5
படனவிவேகபரம்பரவேதா
நடனசபேசசிதம்பரநாதா. 6
அரிபிரமாதியர்தேடியநாதா
அரகரசிவசிவவாடியபாதா. 7
அந்தணவங்கணவம்பரபோகா
அம்பலநம்பாவம்பிகைபாதா 8
அம்பரவிம்பசிதம்பரநாதா
அஞ்சிதாஞ்சிதகுஞ்சிதபாதா. 9
தந்திரமந்திரயந்திரபாதா
சங்கரசங்கரசங்கரநாதா. 10
கனகசிதம்பரசங்கரபுரஹர
அனகபரம்பரசங்கரஹரஹர. 11
சகலகலாண்டசராசரகாரண
சகுணசிவாண்டபராபரபூரண 12
இக்கரைகடந்திடிலக்கரையே
இருப்பதுசிதபரச்சர்க்கரையே. 13
என்னுயிருடம்பொடுசித்தமதே
இனிப்பதுநடராசபுத்தமுதே. 14
ஐயர்திருச்சபையாடகமே
ஆடுதலானந்தநாடகமே. 15
உத்தரஞானசிதம்பரமே
சித்தியெலாந்தருமம்பரமே. 16
அம்பலவாசிவமாதேவா
வம்பலவாவிங்குவாவாவா. 17

நடராசனெல்லார்க்குநல்லவனே
நல்லதெல்லாஞ்செயவல்லவனே. 18
ஆனந்தநாடகங்கண்டோமேபர
மானந்தமோனங்கொண்டோமே. 19
சகளவுபகளநிட்களநாதா
உகளசததலமங்களபாதா. 20
சந்ததமுஞ்சிவசங்கரவசனம்
சங்கீதமென்பதுசற்சனவசனம் 21
சங்கரசிவசிவமாதேவா
வெங்களையாட்கொளவாவாவா. 22
அரகரசிவசிவமாதேவா
அருளமுதந்தரவாவாவா. 23
நடனசிகாமணிநவமணியே
திடனகமாமணிசிவமணியே. 24
நடமிடுமம்பலநன்மணியே
புடமிடுசெம்பலபொன்மணியே. 25
உவட்டாதுசித்திக்குமுள்ளமுதே
தெவிட்டாதுதித்திக்குந்தெள்ளமுதே. 26
நடராசவள்ளலைநாடுதலே
நற்றொழிலாம்விளையாடுதலே. 27
அருட்பொதுநடமிடுதாண்டவனே
யருட்பெருஞ்சோதியென்னாண்டவனே. 28
நடராசமாணிக்கமொன்றதுவே
நண்ணுதலாணிப்பொன்மன்றதுவே. 29
நடராசபலமதுநம்பலமே
நடமாடுவதுதிருவம்பலமே. 30
நடராசர்பாட்டேநறும்பாட்டு
ஞாலத்தார்பாட்டெல்லாம்வெறும்பாட்டு 31
சிதம்பரப்பாட்டேதிருப்பாட்டு
சீவர்கள்பாட்டெல்லாந்தெருப்பாட்டு. 32
அம்பலப்பாட்டேயருட்பாட்டு
அல்லாதபாட்டெல்லாமருட்பாட்டு. 33
அம்பலவாணனைநாடினனே
அவனடியாரொடுங்கூடினனே. 34

நம்பதமாம்புகழ்பாடினனே
    தந்தனவென்றுகூத்தாடினனே. 35
நான்சொன்னபாடலுங்கேட்டாரே
    ஞானசிதம்பரநாட்டாரே. 36
இனிதுயர்படமாட்டேன்விட்டேனே
    யென்குருமேலாணையிட்டேனே. 37
இனிப்பாடுபடமாட்டேன்விட்டேனே
    என்னப்பன்மேலாணையிட்டேனே. 38
சன்மார்க்கம்நன்மார்க்கம்நன்மார்க்கம்
    சகமார்க்கந்துன்மார்க்கந்துன்மார்க்கம். 39
நாதாந்தநாட்டுக்குநாயகரே
    நடராசரேசபாநாயகரே. 40
நான்சொல்லுமிதுகேளீர்சத்தியமே
    நடராசரெனில்வருநித்தியமே. 41
நல்லோரெல்லார்க்குஞ்சபாபதியே
    நல்வரமீயுந்தயாநிதியே 42
நடராசர்தன்னடநன்னடமே
    நடம்புரிகின்றதுமென்னிடமே. 43
சிவகாமவல்லிக்குமாப்பிள்ளையே
    திருவாளனுயன்சீர்ப்பிள்ளையே. 44
சிவகாமவல்லியைச்சேர்ந்தவனே
    சித்தெல்லாஞ்செய்திடத்தேர்ந்தவனே. 45
இறவாவரந்தருநற்சபையே
    யெனமறைபுகழ்வதுசிற்சபையே. 6
என்னிருகண்ணுளிருந்தவனே
    இறவாதருள்மருந்தந்தவனே. 47
சிற்சபையப்பனையுற்றேனே
    சித்தியெலாஞ்செயப்பெற்றேனே. 48
அம்பலவாணர்தம்மடியவரே
    யருளரசாளமணிமுடியவரே. 4
அருட்பெருஞ்சோதியைகண்டேனே
    ஆனந்தத்தெள்ளமுதுண்டேனே. 50
இருட்பெருமாயையைவிண்டேனே
    எல்லாஞ்செய்சித்தியைக்கொண்டேனே. 51

கருணாநிதியேகுணநிதியே
கதிமாநிதியேகலாநிதியே. 52

தருணாபதியேசிவபதியே
தனிமாபதியேசபாபதியே 53

கருணாநிதியேசபாபதியே
கதிமாநிதியேபசுபதியே. 54

சபாபதிபாதம்தபோபிரசாதம்
தயாநிதிபோதம்சமோதயவேதம். 55

கருணம்பரவரகரசிரபவபவ
அருணம்பாதராஹராஹராசிவசிவ 56

கனகாகாபுராஹராசிரகரதா
கருணாகரபரசுராவாஹராஹர. 57

கனகசபாபதிபசுபதிநவபதி
அனகவுமாபதியதிபதிசிவபதி. 58

வேதாந்தபாரம்பரசயசய
நாதாந்தநடாம்பரசயசய. 59

ஏகாந்தசர்வேசசமோதம
யேகாந்தநடேசநமோநம. 60

ஆதாம்பரவாடகவதிசயசய
பாதாம்புசநாடகசயசயசய. 61

போதாந்தபுரேசசிவேசாம
நாதாந்தநடேசநமோநம. 62

ஜாலகோலகனகாம்பரசாயக
சாலகாலவனகாம்பரநாயக. 63

உபலசிரதலசுபகணவங்கண
சுபலகரதலகணபணகங்கண 64

அபயவரதகரதலபுரிகாரண
உபயபாதபதபரபரிபூரண 65

அகரவுகரசுபகரவரசினகர
தகரவகரநவபுரகிரதினகர. 66

வகரசிகரதினகரசசிகரபுர
மகரவகரவரபுரஹரஹரஹர. 67

பரமமந்திரிசகளாகளகரண
படனதந்திரிகமாகமசரண 68

அனந்தகோடிகுணகரகாசோலிதர
அகண்டவேதசிரகாரைபலிதர. 69
பரிபூரணஞானசிதம்பர
பதிகாரணநாதபரம்பர. 70
சிவஞானபதாடகநாடக
சிவபோதபரோகளகூடக 71
சகலலோகபரகாரகவாரக
சபளயோகசரபூரகதாரக 72
சத்வபோதகதாரணதன்மய
சத்யவேதபூரணசின்மய. 73
வரகேசாந்தம்ஶிகாதயகாரிய
பரபாசாந்தசுகோதயசூரிய 74
பளிததீபகசோபிதபாதா
லளிதரூபஸ்தாபிதநாதா. 75
அமிர்தபோபகருணாம்பகநாதா
அமிர்தரூபதருணாம்புசபாதா. 76
அம்போருகபதஆஹாரசங்கர
சம்போசிவசிவசிவசிவசங்கர. 77
சிதம்பரகாசாபரம்பிரகாசா
சிதம்பரேசாசுயம்பிரகாசா. 78
அருட்பிரகாசம்பரப்பிரகாசம்
அகம்பிரகாசச்சிவப்பிரகாசம் 79
நடப்பிரகாசம்தவப்பிரகாசம்
நவப்பிரகாசம்சிவப்பிரகாசம் 80
நாதபரம்பரனேபரநாதசிதம்பரனே
நாததிசம்பரனேதசநாதசுதந்திரனே. 81
ஞானநடத்தவனேபரஞானிபிடத்தவனே
ஞானவரத்தவனேசிவஞானபுரத்தவனே. 82
ஞானசபாபதியேமறைநாடுசதாகதியே
தீனதயாநிதியேபரதேவியுமாபதியே. 83
புத்தந்தரும்போதாவித்தந்தருந்தாதா
நித்தந்தரும்பாதாசித்தந்திரும்பாதா. 84

திருச்சிற்றம்பலம்.

# அருள்விளக்கமாலை.

## எண்சீரடியாசிரியவிருத்தம்.

### திருச்சிற்றம்பலம்

கல்லார்க்குங்கற்றவர்க்குங் களிப்பருளுங்களிப்பே
காணார்க்குங்கண்டவர்க்குங் கண்ணளிக்குங்கண்ணே
வல்லார்க்கும்மாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே
மதியார்க்கும்மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும்மதியே
நல்லார்க்கும்பொல்லார்க்கும் நடுநின்றநடுவே
நரர்களுக்குஞ்சுரர்களுக்கும் நலங்கொடுக்குநலமே
எல்லார்க்கும்பொதுவில்நட மிடுகின்றசிவமே
என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே. 1

தனிச்சிறியேன்சிறிதிங்கே வருந்தியபோததனைத்
தன்வருத்தமெனக்கொண்டு சரியாதக்கணத்தே
பனிப்புறுமவ்வருத்தமெலாந் தவிர்த்தருளிமகனே
பயமுனக்கென்னென்றென்னை பரிந்தணைத்தகுருவே
இனிப்புறுநன்மொழிபுகன்றென்முடிமிசைமலர்க்கா
லிணையமர்த்தி யெனையாண்ட வென்னுயிர்நற் றுணையே
கனித்தநறுங்கனியேயென் கண்ணேசிற்சபையில்[யே
கலந்துநடத்தரசேயென் கருத்துமணிந்தருளே. 2

இருளிரவிலொருமூலைத் திண்ணையில்நான்பசித்தே
இளைப்புடனேபடுத்திருக்க வெனைத்தேடிவந்தே [ப்
பொருளுணவுகொடுத்துண்ணச் செய்வித்தேபசியை
போக்கியருள்புரிந்தவென்றன் புண்ணியநற்றுணையே
மருளிரவுநீக்கியெல்லா வாழ்வுமெனக்கருளி
மணிமேடைநடுவிருக்க வைத்தவொருமணியே
யருளுணவுமளித்தென்னை யாட்கொண்டசிவமே
யம்பலத்தென்னரசேயென் னலங்கலணிந்தருளே 3

நான்பசித்தபோதெல்லாந் தான்பசித்ததாகி
நல்லுணவுகொடுத்தென்னைச் செல்வமுறவளர்த்தே
யூன்பசித்தவிளைப்பொன்றுந் தோற்றாதவகையே
ஒள்ளியதெள்ளமுதெனக்கிங் குவந்தளித்த ஒளியே

வான்பதிக்குநெடுமாற்கு நான்முகற்குமரிதாம்
வாழ்வெனக்கேயாகியுற வாமளித்தபதியே
தேன்பரித்தமலர்மணமே திருப்பொதுவில்ஞானத்
திருநடஞ்செய்யரசேயென் சிறுமொழியேற்றருளே.

திசையறியமாட்டாதே திகைத்தசிறியேனைத்
தெளிவித்துமணிமாடத் திருத்தவிசிலேற்றி
நசையறியாநற்றவரு மற்றவருஞ்சூழ்ந்து
நயப்பவருட்சிவநிலையை நாட்டவைத்தபதியே
வசையறியாப்பெருவாழ்வே மயலறியாவறிவே
வானடுவேயின்பவடி வாயிருந்தபொருளே
பசையறியாமனத்தவர்க்கும் பசையறிவித்தருளப்
பரிந்தநடத்தரசேயென் பாட்டுமணிந்தருளே. 5

நன்மையெலாந்தீமையெனக் குரைத்தோடித்திரியும்
நாய்க்குலத்திற்கடையான நாயடியேனியற்றும்,புன்
மைஎலாம்பெருமைஎனப் பொருத்தருளிப்புலையேன்
பொய்யனைமெய்யுரையாகப் புரிந்துமகிழ்ந்தருளி
தன்மையெலாமுடையபெருந் தவிசேற்றிமுடியுந்
தரித்தருளியைந்தொழில்செய் சதுரளித்தபதியே
யின்மையெலாந்தவிர்ந்தடியா ரின்பமுறப்பொதுவி
லிலங்குநடத்தரசேயென் னிசையுமணிந்தருளே. 6

மதமென்றுஞ்சமயமென்றுஞ் சாத்திரங்களென்றும்
மன்னுகின்றதேவரென்றும் மற்றவர்கள்வாழும்
பதமென்றும்பதமடைந்த பத்தரநுபவிக்கப்
பட்டனுபவங்களென்றும் பற்பலவாவிரிந்த
விதமொன்றுந்தெரியாதே மயங்கியவென்றனக்கே
வெட்டவெளியாயறிவித் திட்டவருளிறையே
சதமொன்றுஞ்சுத்தசிவ சன்மார்க்கபொதுவில்
தனிநடஞ்செய்யரசேயென் சாற்றுமணிந்தருளே. 7

அருளுடையாரெல்லாருஞ் சமரசசன்மார்க்க
மடைந்தவரேயாதலினா லவருடனேகூடி
தெருளுடையவருணெறியிற் களித்துவிளையாடிச்
செழித்திடுகவாழ்கவெனச் செப்பியசற்குருவே

பொருளுடையபெருங்கருணைப் பூரணமெய்ச்சிவமே
போதாந்தமுதலாறும் நிறைந்தொளிருமொளியே
மருளுடையார்தமக்குமரு ணீக்கமணிப்பொதுவில்
வயங்குநடத்தரசேயென் மாலையுமேற்றருளே. 8

காலையிலேஎன்றனக்கே கிடைத்தபெரும்பொருளே
களிப்பேயென்கருத்தகத்தே கனிந்தநறுங்கனியே
மேலையிலேயிம்மையிலே யொருமையிலேதவத்தால்
மேவுகின்றபெரும்பயனும் விளைவையெலாந்தருமச்
சாலையிலேயொருபகலிற் றந்ததனிப்பதியே
சமரசசன்மார்க்கசங்கத் தலையமர்ந்தநிதியே
மாலையிலேசிறந்தமொழி மாலையணிந்தாடு
மாநடத்தென்னரசேயென் மாலையணிந்தருளே. 9

தலைகாலிங்கறியாதே திரிந்தசிறியேனைத்
தான்வலிந்தாட்கொண்டருளித் தடைமுழுதுந்தவிர்
மலைவறுமெய்யறிவளித்தே யருளமுதமருத்தி [த்தே
வல்லபசத்திகளெல்லா மருவியிடப்புரிந்து
நிலையுறவேதானிமடி மயனுமொருவடிவாய்
நிறைநயநிறைவித்துயர்ந்த நிலையதன்மேலமர்த்தி
அலர்தலைப்பொருட்சோதி யரசுகொடுத்தருளி
யாடுகின்றவரசேயென் னலங்கலணிந்தருளே. 10

## முறையீடு

எண்சீரடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

மருந்தறியேன்மணியறியேன் மந்திரமொன்றறியேன்
மதியறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன்
திருந்தறியேன்திருவருளின் செயலறியேனறந்தான்
செய்தறியேன்மனமடங்குந் திறத்திலோரிடத்தே
யிருந்தறியேனறிந்தோரை யடுத்திடவுமறியேன்
எந்தைபிரான்மணிமன்றமெய்தலறிவேனோ
விருந்ததிசைசொலவறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

அகங்காரக்கொடுங்கிழங்கை யகழ்ந்தெறியவறியே
னறிவறிந்தவந்தணர்பாற் செறியுநெறியறியேன்
நகங்கணைமுறுதவர்போல் நலம்புரிதுமறியேன்
நச்சுமரக்கனிபோலே யிச்சைகனிந்துழன்றேன்
மகங்காணும்புலவரெலாம் வந்துதொழநடிக்கும்
மணிமன்றந்தனையடையும் வழியுமறிவேனோ
ககங்காணத்திரிகின்றே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்செய்வேனேதுமறிந்திலனே 2

கற்குமுறைகற்றறியேன் கற்பனகற்றறிந்த
கருத்தர்திருக்கூட்டத்திற் களித்திருக்கவறியேன்
நிற்குநிலைநின்றறியே னின்றாரிணடிததேன்
நெடுங்காமப்பெருங்கடலை நீந்துவகையறியேன்
சிற்குணமாமணிமன்றிற் றிருநடனம்புரியுந்
திருவடியென்சென்னிமிசைச் சேர்க்கவறிவேனோ[ன்
இக்குணஞ்செய்துழலகின்றேனெங்ஙனநான்புகுவே
யார்க்குரைப்பேனென்செய்வேனேதுமறிந்திலனே 3

தேகமுறுபூதநிலைத் திறஞ்சிறிதுமறியேன்
சித்தாந்தநிலையறியேன் சித்திநிலையறியேன்
யோகமுறுநிலைசிறிது முணர்ந்தறியேன்சிறியே
னுலகநடையிடைக்கிடந்தே யுழைப்பாரிற்கடையேன்
ஆகமுறுதிருநீற்றி னொளிவிளங்கவிசைந்தே
யம்பலத்திலாடுகின்ற வடியையறிவேனோ
ஏகனுபவமறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்செய்வேனேதுமறிந்திலனே 4

வரையபரமார்க்கமொடு பரமார்க்கமறியேன்
மரணபயந்தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதையறியேன்
திரையறுதண்கடலறியே னக்கடலைக்கடந்தே
தெள்ளமுதமுண்ணவறியேன் சினமடக்கவறியேன்
உரையுணர்வுகடந்ததிரு மணிமன்றந்தனிலே
யொருமைநடம்புரிகின்றார் பெருமையறிவேனோ
இரையுறுபொய்யுலகினிடை எங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்செய்வேனேதுமறிந்திலனே 5

திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தமேலீடு.

இராகம்-சஹானா-ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்.

கையறவிலாதுநடுக் கண்புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டுதிறந் தூண்டுநடுநாட்டு
ஐயர்மிகவுய்யும்வகை யப்பர்விளையாட்டு
ஆடுவதென்றேமறைகள் பாடுவதுபாட்டு. 1

சிற்சபையும்பொற்சபையுஞ் சொந்தமெனதாச்சு
தேவர்களும்மூவர்களும் பேசுவதென்பேச்சு
இச்சமயவாழ்விலெனக் கென்னயினிமேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு. 2

ஐயாருட்சோதியர சாட்சியெனதாச்சு
ஆரணமுமாகமும் பேசுவதென்பேச்சு
இவ்வுலகவாழ்விலெனக் கென்னையினியேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு. 3

ஈசனருளாற்கடலி லேற்றதொருவோடம்
ஏறிக்கரையேறினே னிருந்ததொருமாடம்
தேசுறுமம்மாடநடுத் தெய்வமணிப்பீடம்
தீபவொளிகண்டவுடன் சேர்ந்ததுசந்தோடம். 4

மேருமலைஉச்சியில் விளங்குகம்பநீட்சி
மேவுதன்மேனுலகில் வீறுமாசாட்சி
சேருமதிற்கண்டபல காட்சிகள்கண்காட்சி
செப்பலரிதாமிதற்கென் னப்பனருட்காட்சி. 5

துரியமலைமேலுளதோர் சோதிவளநாடு
தோன்றுமதிலையர்நடஞ் செய்யுமணிவீடு
தெரியுமதுகண்டவர்கள் காணிலுயிரோடு
செத்தவரெழுவாரென்று கைத்தாளம்போடு. 6

சொல்லாளப்பரிய சோதிவரைமீது
தூயதுரியப்பதியில் நேயமறையோது
எல்லாஞ்செய்வல்லசித்தர் தம்மையுறும்போது
இறந்தாரெழுவாரென்று புரந்தாரையூது. 7

சிற்பொதுவும்பொற்பொதுவும் நானறியலாச்சு
சித்தர்களும்முத்தர்களும் பேசுதென்பேச்சு
இப்பெரியவிவ்வுலகி லென்னையினியேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு. 8

வலதுசொன்னபேர்களுக்கு வந்ததுவாய்த்தாழ்வு
மற்றவரைச்சேர்ந்தவர்க்கும் வந்ததலைத்தாழ்வு
வலதுபுசமாடநம்மால் வந்ததருள்வாழ்வு
மற்றுநமைச்சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல்வாழ்வு 9

அம்பலத்திலெங்களைய ராடியநல்லாட்டம்
அன்பொடுதுதித்தவருக் கானதுசொல்லாட்டம்
வம்புசொன்னபேர்களுக்கு வந்ததுமல்லாட்டம்
வந்தலையாட்டமன்றி வந்ததுபல்லாட்டம் 10

நாத்திகஞ்சொல்கின்றவர்தம் நாக்குமுடையார்க்கு
நாக்குருசிகொள்ளுவது நானறியபிண்ணாக்கு
சீர்த்திபெருமம்பலவர் சீர்புகன்றவாக்கு
செல்வாக்குநல்வாக்கு தேவர்திருவாக்கு 11

திருச்சிற்றம்பலம்.

---

## வேட்கைக்கொத்து.

தலைமகள்பாங்கியொடுகூறல்

எண்சீர்க்கழிநெடிலடிச்சந்தவிருத்தம்.

விண்படைத்தபுகழ்த்தில்லையம்பலத்தானெவர்க்கும்
மேலானன்பொருளை மேவுநடராஜன்
பண்படைத்தவெள்ளையறியா விளம்பருவந்தனிலே
பரிந்துவந்துமாலையிட்டான்பார்த்தறியான்மீட்டும்
பெண்படைத்தபெண்களெலா மவமதித்தேவலது
பேசுகின்றார்கூசுகின்றேன் பிச்சியெனலானேன்
கண்படைத்துக்குழியில்விழக்கணக்குமுண்டோவவ
கணக்கறிந்தும்விடுவேனோகண்டாயென்றோழி[ன்றன்

சித்தமணியம்பலத்தா னென்பிராணநாதன்
சிவபெருமானெமபெருமான் செல்வநடராஜன்

வாய்த்தவென்னையறியாத விளம்பருவந்தனிலே
மகிழ்ந்துவந்துமாலையிட்டார் மறித்துமுகம்பாரா
ராய்த்தகலைகற்றுணர்ந்த வணங்கலையார்தமக்கு
ளார்செய்தபோதனையோ வாறுலுமிதுகேள்
காய்த்தகுரைசவ்வளையந்த கணக்குமுண்டோவவன்றன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி. 2

என்னுயிரிற்கலந்துகலந் தினிக்கின்றபெருமா
னென்னிறைவன்பொதுவினட மியற்றுநடராஜன்
றன்னையறியாப்பருவத் தென்னைமணம்புரிந்தான்
றனையறிந்தபருவத்தே யென்னையறியவிரும்பான்
பின்னையன்றிமுன்னுமொரு பிழைபுரிந்தேனில்லை
பெண்பரிதாபங்காணல் பெருந்தகைக்குமழகோ
தன்னலென்றுல்லைக்கின்ற கணக்குமுண்டோவவன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி [றன்

தெருளமுதத்தனியோகர் சிந்தையினுஞானச்
செல்வரறிவிடத்துநடஞ் செய்யுநடராஜன்
அருளமுதமளிப்பனென்றே யன்றுமணம்புணர்ந்தா
னளித்தறியானுந்துணையு மநுபவித்துமறியேன்
மருளுடையானல்லனொரு வஞ்சகனுமல்லன்
மனமிரக்கமிகவுடையோன் வல்வினையேனளவி
லிருளுடையார்போருக்கு மிபலபென்னையவன்றன்
னியல்பறிந்தும்விடுவேனோ வினித்தானென்றோழி. 4

சின்மயமாம்பொதுவினிலே தன்மயமாய்நின்று
திருநடஞ்செய்பெருங்கருணைச் செல்வநடராஜ
னென்மயநானறியாத விளம்பருவந்தனிலே
யென்னைமணம்புரிந்தனனீ தெல்லாருமறிவா
ரின்மையில்லாதவர்போ லின்றுமணந்தருளா
னிறையளவும்பிழைபுரிந்தே னிலையவனிதயங்
கன்மயமேவன்சுவைக் கனியமுமேயென்னுங்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி. 5

என்குணத்தா னெல்லார்க்கு மிறைவனெல்லாம்வல்
னென்னகத்தும்புறத்துமுளா னிலநடராஜன் [லா

பெண்குணத்தையறியாத விளம்பருவந்தனிலே
பிச்சேற்றிமணம்புரிந்தான் பெரிதுகளித்திருந்தேன்
வண்குணத்தாலநுபவநா னறியநின்றபொழுதில
வந்தறியானின்பமொன்றுந் தந்தரிபாலவனும்
வெண்குணத்தானல்லனிது நல்லனைப்பலகால்
விழித்தறிந்தும்விடுவேனே விளப்பாயென்றோழி 6

பொய்யாதபுகழுடையான் பொதுவினடம்புரிவான்
புண்ணியர்பாலண்ணியநற் புலிநடராஜன்
கொய்யாயிவரும்பனைய விளம்பருவந்தனிலே
குறித்துமணம்புரிந்தவனென் மரித்தும்வரக்காணேன்
செய்யாதசெய்கையொன்றுஞ்செய்தறியேன்சிறிதுந்
திருவுளமேயறியுமற்றென்னொருவுலகத்தின்செயல்க
ணையாதவென்றனுயிர் நாதனருட்பெருமை
நானறிந்தும்விடுவேனோ நவிலாயென்றோழி. 7

கண்ணேயாமென்னுயிரிற் கலந்துநின்றகணவன்
கணக்கறியான்பிணக்கறியான் கருணைநடராஜ
றன்னையாமிளம்பருவந் தன்னிலெல்லாந்தனித்துத்
தானேவந்தருள்புரிந்து தனிமாலைபுனைந்தான்
பெண்ணனையார்கண்டபடி பேசவுநான்கூசாப் [தா
பெருமையொடேமிருந்தேனென் னருமையெலாமறிந்
துண்ணையாவனைநவரவு தாழ்த்தனனின்றவன்றன்
துளமறிந்தும்விடுவேனோ வுரையாயென்றோழி. 8

ஊன்மறந்தவுயிரகத்தே யொளிநிறைந்தவொருவ
னுலகமெலாமுடையவ னெல்லைனுடையநடராஜன்
பான்மறக்குசிறியவிளம் பருவமதினமாலைப்
பரிந்தணிந்தானெறிந்தளிப் பருவமிதிற்பரியான்
றான்மறந்தானெனினுமிங்கு நான்மறக்கமாட்டேன்
றவற்றேரியவத்திழியச் சமமதுமும்வருமோ
கோன்மறக்குடியேன்பான் மிடியேனென்னன்றன்
குணமறிந்தும்விடுவேனோ கூறாயென்றோழி. 9

தனித்தபரநாதமுடிக் கலத்தின்மிசைதலத்த
வனைவரெலாம்வணங்கநின்ற தலைநடராஜ

னினித்தசுகமறிந்துகொளா விளம்பருவந்தனிலே
பெண்புருவகநிவிருந்தா பின்புகண்டேனிலை
யனித்தமிலாவிச்சரிதம் யார்க்குரைப்பேனந்தோ
வலவறிவானறிவே வயலறிவாருளரோ
துனிததவிலைவிடுதகொருநாற் சுத்தநிலையதனிற்
சாங்கண்டேம்விடுவேனே சொலலாயென்றோழி. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சிவதரிசனம்.

### எண்சீரடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாவிமனக்குரங்காட்டம் பார்க்கமுடியாதே [ந்தே
பதிவெறுத்தேனிதிவெறுத்தேன் பற்றனைத்துந்தவிர்
ஞவியுடல்பொருளையும்பாற் கொடுத்தேனுன்னருட்
ராசைமயமாகியுனை யடுத்துமுயல்கின்றேன் [பே
கூவியெனையாட்கொள்ள நினையாயோநினது
குறிப்பறியேன்பற்பலகால் கூவியிளைக்கின்றேன்
தேவிசிவகாமவல்லி மகிழுமணவாளா
தெருணிறைவானமுதளிக்குந் தருணமிதுதானே. 1

கூட்டவிழ்ந்தகமலமெனக் கருத்தவிழ்ந்துநினையே
கருதுகின்றேன்வேறொன்றுங் கருகிலேனிதுதான்
சிட்டருளந்திகழ்கின்ற சிவபதியேநினது
திருவுளமேயறிந்ததுகாண் செப்புதலென்மேல்
விட்டகுறைதொட்டகுறை யிரண்டுநிறைந்தனவீ
ரைந்துவந்தேயருட்சோதி புரிந்தருளுந்தருணந்
தொட்டதுநான்றனித்துரைத்தே னீயுணர்த்தவுணர்ந்தே
சொல்லுதெல்லாமெனையறிவாற் சொல்லவல்லேனன்றே.

காட்டையெலாங்கடந்துவிட்டே னாட்டையடைந்துவந்து, சமுகசர்ப்பென மதிற்காட்சி கண்குளிரக்கண்டேன், கோட்டையெலாங்கொடிநாட்டி கோலமிடப்பார்த்தேன், கோயிலின வாயிலிலே குறைகளெலாந்தவிர்த்தேன், சேட்டையற்றுக்கருவியெலா மெ

ன்வசநின்றிடவே, சித்தியெலாம்பெற்றேனுன் றிருச்
சிற்றம்பலமேல், பாட்டையெலாம்பாடுகின்ற னிதுத
ருணம்பதியே, பலந்தருவென னுளந்தனிலே கலந்து
நிறைந்தருளே. 3

திருச்சிற்றம்பலம்

---

## பிரியேனென்றல்.

### எண்சீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பாநான்பற்பலகா லறைவதென்னேயடியே
னச்சமெலாந்துன்பமெலா மறுத்துவிரைந்துவந்தே
யிப்பாரிலிதுதருண மென்னையடைந்தருளி
யெண்ணமெலா முடித்தென்னை யென்றுகொளாயே
தப்பாமலுயிர்விடுவேன் சத்தியஞ்சத்தியநின் [னிலோ
ருளிணைகளறிவதிது தயவுடையோயெவர்க்குந்
துப்பாகித்துணையாகித் துலங்கியமெய்த்துணையே
சுத்தசிவானந்தவருட் சோதிநடத்தரசே. 1

படமுடியாதினித்துயரம் படமுடியாதரசே [தே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழு
துடலுயிராதியவெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன்
னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கேயளிப்பாய்
வடலுறுசிற்றம்பலத்தே வாழ்வாயென்கண்ணுண்
மணியேயென்குருமணியே மாணிக்கமணியே
நடனசிகாமணியேயென் னவமணியேஞான
நன்மணியேபொனமணியே நடராஜமணியே. 2

உன்னைமறந்திடுவேனோ மறப்பறியேன்மறந்தா
லுயிர்விடுவேன்கணந்தரியே னுண்ணையிதுநீ
யென்னைமறந்திடுவாயோ மறந்திடுவாயெனில்யா
னென்னசெய்வேனெங்குருவே னெவர்க்குரைப்பேனெந்தா
யன்னையினுந்தயவுடையாய் நீமறந்தாயெனினு
மகிலமெலாமளித்திடுநின் னருள்மறவாதென்றே
யின்னுமிகக்களித்திங்கே யிருக்கின்றேனமறவே
லிதுதருணமருட்சோதி யெனக்குவிரைந்தருளே. 3

பெரியனருட்பெருஞ்சோதிப் பெருங்கருணைப்பெருமான்
பெரும்புகழைப்பேசுதலே பெரும்பேறென்றுணர்ந்தே
தரியநிலத்தவரெல்லாந் துதிக்கின்றாரேழை
துதித்தல்பெரிதலவிங்கே துதித்திடவென்றெழுந்த
வரியபெரும்பேசைக்கடல் பெரிதேயதுவென்
னளவுகடந்திழுக்கின்ற காதலினால்விரைந்தே
யுரியவருளமுதளித்தே நினைக்குறிப்பித்தருள்வா
யுலகமெலாங்களித்தோங்க வோங்குநடத்தரசே. 4

சவலையெலாந்தவிர்த்துமிகக் களிம்புறுநெடுநினையே
கைகுவித்துக்கண்களினீர் களித்துசொரிந்திடவே
சவலைமனச்சலமெலாந் தீர்ந்துசுகமாய்த்
தானேதானாகியின்பந் தனிநடஞ்செய்யிணைத்தாள்
தவலருஞ்சீர்ச்சொன்மாலை வணங்குவணங்தணிந்து
தானுங்கொணடத் தருணமிதுதானே
குவலயத்தாரதிசயிக்க வெழுந்தருளிவருவாய்
குருவேயென்குற்றமெலாங்குணமாகக்கொண்டவனே

திருச்சிற்றம்பலம்.

---

## வாதனைக்கிரங்கல்.

எண்சீர்க்கழிநெடிலடிச்சந்தவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

படமாட்டேன்றுபர்சிறிதும் படமாட்டேனினிநான்
பயப்படவுமாட்டேனுன் பதத்துணையேபிடித்தேன்
விடமாட்டேனேமரகத விடமாட்டேன்கண்டீர்
மெய்ம்மையிதுநம்மாணை விளம்பினனும்மடியேன்
கெடமாட்டேனபிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டே
னொளியயபலத்தாடல்வளரொளிநும்மல்லா[ன்
நடமாட்டேனென்னுளத்தே நான்சாகமாட்டே
னல்லதிருவருளாலே நான்றானனே. 1

தாகாதகல்வியிலே தலைகாட்டித்தலைகாட்டிக்கொடுத்
சடையறியாக்கால்காட்டி தாம்பெறவுமளித்தீர் [தீர்

மாகாதலுடையவனுன் மனங்களிவித்தழியா
வானமுதும்மெய்ஞ்ஞான மருந்தமுணப்புரிந்தீர்
போகாதபுனலாலே சுத்தவுடம்பினராம்
புண்ணியரும்நண்ணரிய பொதுநிலையுந்தந்தீர்
ராகாதிபதிகளுநின் றேத்தவளர்கின்றீர்
நடராசரே நுமக்கு நானேதுசெய்வேனே 2

வேதாந்தநிலையுமதா னந்தத்தேவிளங்க
மெய்ந்நிலையங்காட்டுவித்தீர் விளங்கியசித்தாந்தப்
போதாந்தநிலையுமப்பாற் புகலரிதாம்பெரிய
பொருணிலையுந்தெரிவித்தீர் புண்ணியரே நுமது
பாதாந்தமறிவித்தீர் சுத்தவடிவுடனே
பகர்பிரணவகாரப் பரிசுமெனக்களித்தீர் [தீர்
நாதாந்தத்தனிச்செங்கோல் நான்செலுத்தக்கொடுத்
நடராசரே நுமக்கு நானேதுசெய்வேனே. 3

பாயிரமாமறைகளெல்லாம் பாடுகின்றபாட்டுன்
பாட்டேயென் றறிந்துகொண்டேன் பரம்பொருளுன்
ஆயிரமாயிரங்கோடி நாவுடையோரெனினுபெருமை
மணுத்துணையுபபுகலரிதே யந்தோவிச்சிறியேனை
வாயிரங்காவகைபுலத் துணிக்கேயென்னுடைய
மளத்தாசைபொருகடலோ வெழுகடலிற்பெரிதே
சேயிரங்கா முனமெடுத்தே யணைந்திடுந்தாயனையாய்
திருச்சிற்றம்பலம்விளங்குஞ் சிவஞானகுருவே. 4

அந்நாளிலடிச்சிறியே னம்பலவாயிலிலே
யருளொளியினைத்தொருபுறத்தே யயர்ந்தழுதின்றேன்
முந்நாளில்யானைபுரிந்த பெருந்தவத்தாலெனக்கு
முகமலர்ந்துமொழிந்தவருண் மொழியையினைந்தந்த
செந்நாளையெதிர்பார்த்தே பன்னுளுங்களித்தேன் [ச
சிந்தைமலர்ந்திருந்தேனச் செல்வமிகுதிருநாள்
இந்நாளேயாதலினு லெனக்கருள்வீரெனறே
னென்பதன்முன்னத்தீர் நும்மன்புலகில்பெரிதே. 5

திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தக்களிப்பு.

## திருச்சிற்றம்பலம்.

நல்லமருந்திம்மருந்து-சுக
நல்கும்வைத்தியநாதமருந்து-நல்ல
அருள்வடிவானமருந்து-நம்முன்
அற்புதமாகவமர்ந்தமருந்து
இருளறவோங்குமருந்து-அன்பர்க்
கின்புருவாகவிருந்தமருந்து-நல்ல 1
சஞ்சலந்தீர்க்குமருந்து-எங்குந்
தானேதானாகித்தழைக்குமருந்து
அஞ்சலென்றாளுமருந்து-சச்சி
தானந்தமாகவமர்ந்தமருந்து-நல்ல 2
வித்தகமானமருந்து-சுத்தர்
வேதமுடிவில்விளங்குமருந்து
தத்துவாதீதமருந்து-என்னைத்
தானாக்கிக்கொண்டதயாளமருந்து-நல்ல 3
பிறப்பையொழிக்குமருந்து-யார்க்கும்
பேசப்படாதபெரியமருந்து
இறப்பைத்தவிர்க்குமருந்து-என்னு
ளென்றுமதுரித்தினிக்குமருந்து-நல்ல 4
அம்பலத்தாடுமருந்து-பர
மானந்தவெள்ளந்தழைக்குமருந்து
எம்பலமாகுமருந்து-வேளூ
ரென்னுந்தலத்திலிருக்குமருந்து-நல்ல 5
சேதப்படாதமருந்து-உண்டார
றென்பேர்விளிக்குந்தெவிட்டாமருந்து
பேசப்படாதமருந்து-மலைப்
பெண்ணிடங்கொண்டபெரியமருந்து-நல்ல 6
பால்வண்ணமாகுமருந்து-அதிற்
பச்சைநிறமும்படர்ந்தமருந்து
நால்வண்ணமாகுமருந்து-உள்ளே
நோக்குநன்றோர்களைநோக்குமருந்து-நல்ல 7
பார்க்கப்பசிபோமருந்து-தன்னைப்
பாராதவர்களைச்சேராமருந்து
கூர்க்கத்தெரிந்தமருந்து-அரு
கூலமருந்தென்றுகொண்டமருந்து-நல்ல 8

கோமளங்கூடுமருந்து-நலம்
கொடுக்கத்துசங்கட்டிக்கொண்டமருந்து
நாமளவாதமருந்து-நம்மை
நாமறியும்படிநண்ணுமருந்து-நல்ல 9
மூவர்க்கரியமருந்து-செல்வ
முத்துக்குமாரனையீன்றமருந்து
நாவிற்கினியமருந்து-தைய
ளையங்கண்டுதொழுவுமருந்து-நல்ல 10

திருச்சிற்றம்பலம்

---

இராகம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி. [தமோ

எனக்குமுனக்குமிசைந்தபொருத்தமென்னபொருத்
இந்தப்பொருத்தமுலகில்பிறருக்கெய்தும்பொருத்த

சரணம். [மே.

தனக்குநிகரிங்கில்லாதுயர்ந்ததம்பமொன்றதே
தாவிப்போகப்போகநூலின்றாத்தினின்றதே
கணக்கத்திகைப்புற்றங்கேநானுங்கலங்கிலருந்தவே
கலக்கநீக்கித்தூக்கிவைத்தாய்கிலைபொருந்தவே 1

இங்கோர்மலையினடுவிலுயர்ந்ததம்பநனுகவே
யேறிப்போகப்போகநூலினிழைபோனனுகவே
அங்கேதிகைத்துநடுங்கும்போதென்னடுக்கநீக்கியே
யதன்மேலுயர்ந்தவிலையில்வைத்தாயடிமையாக்கியே.

இரவிற்பெரியவெள்ளம்பரவியெங்குந்தயங்கவே
யானுஞ்சிலரும்படகிலேறியேமயங்கவே [யே
விரவிதனித்தங்கென்னையொருகணமேட்டிலேற்றி
விண்ணினுயர்ந்தமாடத்திருக்கவிதித்தாய்போற்றியே
மேலைப்பாற்சிவகங்கையென்னுமோர்தீர்த்தந்தன்னை
மேவிப்படிற்றவரிநீரில்விழுந்தவென்னையே [யே
யேலத்தூக்கிலுமுடம்புநனையாதெடுத்ததேபொன்றே
வெளித்தெனகரத்திற்பொற்பூணணிந்தவிறைவநீயன்
என்னதுடலுமுயிரும்பொருளுநின்னதல்லவோ [றோ
வென்தாயிதனைப்பெறுகவெனநானின்றுசொல்லவோ

சின்னவயதிலென்னையாண்ட திறத்தைநினைக்குதே
சித்தனைக்கக்கண்ணீர்பெருக்கியுடம்பைநனைக்குதே.
அப்பாநின்னையன்றியெங்குமணைப்பாரில்லையே
யந்தேநின்னையன்றியெங்குமருள்வாரில்லையே
எப்பாலவர்க்குநின்னையன்றியிறைமையில்லையே
யெனக்குநின்மேலன்றியுலகிலிச்சையில்லையே. 6
ஆசேயுன்னையணைக்கவெனக்குள்ளாசைபொங்குதே
யணைப்போமென்றமுண்மையாலென்னுளந்தங்குதே
விரைசேர்பாதம்பிடிக்கவென்கைவிரைந்துநீளுதே
மேவிப்பிடித்துக்கொள்ளுந்தோறுமுவகையாளுதே 7
தனியென்மேல்நீர்வைத்ததயவுதாய்க்குமில்லையே யே
தருமைந்தொழிலும்வேண்டுந் தோறுந்தருதல் வல்லை
வினவுமெனக்கென்னுயிரைப்பார்க்கமிகவநல்லையே
மிகவுநான்செய்குற்றங்குறித்துவிடுவாயல்லையே. 8
என்னையாண்டவண்ணமெண்ணியுள்ளமுருகுதே
என்னைவிழுங்கியெங்குமின்பவெள்ளம்பெருகுதே
உன்னவுன்னமனமுமியிருமிடம்புமினிக்குதே [குதே.
யுன்னோடென்னைவேறென் றெண்ணின்மிகவும்பிணிக்
உன்பேரருளைநினைக்குந்தோறுமிடப்புபொடிக்குதே
உண்டபசிதீர்ந்தாற்போற்சாதமிகவுந்தடிக்குதேறே
அன்பேயமையுமென்றபெரி யவர்வார்த்தைபோயிற்
யன்போரணுவுமில்லாவெனக்கிங்கருளலாயிற்றே 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருவருள்விலாசப்பத்து.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறுமுகப்பெருங்கருணைக்கடலேதெய்வ
யானைமகிழ்பணிக்குன்றேயரசேமுக்கட்
ம்பறுமுதற்பெருஞ்சுடர்க்குட்சுடரேசெவ்வேல்
பிடித்தருளும்பெருந்தகையேபிரமஞான
வீறுமுகமம்பருகுணத்தோரிதயத்தோங்கும்
விளக்கமயாநந்தவெள்ளமேமுன

சேறுமுகப்பெரியவருட்குருவாயென்னைச்
சிறுகாலையாட்கொண்டதேவதேவே. 1
கண்ணிமதிபுனைந்தசடைக்கனியேமுக்கட்
கரும்பேயென்கண்ணேமெய்க்கருணைவாழ்வே
புண்ணியநன்னிலையுடையோருளத்தில்வாய்க்கும்
புத்தமுதேயானந்தபோகமேயே
எண்ணியமெய்த்தவர்க்கெல்லாவெளிநிலிந்த
வென்னரசேயாறுமுகத்திறையாம்வித்தே
திண்ணியவென்மனமுருக்கிக்குருவாயென்னைச்
சிறுகாலையாட்கொண்டதேவதேவே. 2
பன்னிருகண்மலர்ந்தகடலேஞானம்
பரஞ்சுடரேயாறுமுகம்படைத்தகோவே
யென்னிருகண்மணியேயெந்தாயேயென்னை
யின்றுனேயென்னரசேயென்றன்வாழ்வே
மின்னிருவர்புடைவிளங்கமயின்மீதேறி
விரும்புமடியார்காணமேவுந்தேவே
சென்னியினின்னடியலர்வைத்தென்னைமுன்னே
சிறுகாலையாட்கொண்டதேவதேவே. 3

திருச்சிற்றம்பலம்

---

## பாங்கியர்க்கறிவுறுத்தல்.

### கண்ணிகள்.

திருச்சிற்றம்பலம்

அம்பலத்திலாடுகின்றார் பாங்கிமாரே-அவர்
ஆட்டங்கண்டுநாட்டங்கொண்டேன் பாங்கிமாரே 1
ஆடுகின்றசேவடிமேற் பாங்கிமாரே-மிக
ஆசைகொண்டுவாடுகின்றேன் பாங்கிமாரே 2
இடவடிவாய்ச்சபையிற் பாங்கிமாரே-நட
மிட்டவர்மேலிட்டம்வைத்தேன் பாங்கிமாரே 3
ஈவுடற்கிச்சைவையன பாங்கிமாரே-நட
நேசாதமயெய்தவண்ணம் பாங்கிமாரே 4
உத்தமமாம்பொன்னம்பலத்தே பாங்கிமாரே-யின்ப
உருவாகியோங்குகின்றார் பாங்கிமாரே 5

ஊனவுலகைக்கருதேன் பாங்கிமாரே-மன்றில்
உத்தமருக்குறவானேன் பாங்கிமாரே 6
கற்பனையெல்லாங்கடந்தார் பாங்கிமாரே-யென்றன்
கற்பனைக்குட்படுவாரோ பாங்கிமாரே 7
கண்டிலாநான்படும்பாடு பாங்கிமாரே-மூன்று
கண்ணுடையாரென்பாரையோ பாங்கிமாரே 8
கன்மனமெல்லாங்கரைப்பார் பாங்கிமாரே-மனங்
கரையாரென்னளவிலே பாங்கிமாரே 9
கள்ளமொன்றுமறியேனான் பாங்கிமாரே-என்னைக்
கைவிடவுந்துணிவாரோ பாங்கிமாரே 10
கற்பழித்துக்கலந்தாரே பாங்கிமாரே-இன்று
கைநழுவவிடுவாரோ பாங்கிமாரே 11
கண்டவரெல்லாம்பழிக்க பாங்கிமாரே-என்றன்
கன்னியழித்தேயொளித்தார் பாங்கிமாரே 12
காமனைக்கண்ணாலெரித்தார் பாங்கிமாரே-என்றன்
காதலைக்கண்டறிவாரோ பாங்கிமாரே 13
காவலையெல்லாங்கடந்து பாங்கிமாரே-என்னைக்
கைகலந்தகள்ளரவர் பாங்கிமாரே 14
காணவிழந்தேனவரைப் பாங்கிமாரே-கொண்டு
காட்டுவாரையறிந்திலேன் பாங்கிமாரே 15
கிட்டவரவேண்டுமென்றார் பாங்கிமாரே-நான்
கிட்டுமுன்னேயெட்டிநின்றார் பாங்கிமாரே 16
கிங்கரங்கேயென்றிசைத்தார் பாங்கிமாரே-நான
கேட்பதன்முன்சேட்படுத்தார் பாங்கிமாரே 17
கிள்ளையைத்தூதாவிடுத்தேன் பாங்கிமாரே-அது
கேட்டுவரக்காணேனையே பாங்கிமாரே 18
கீதவகைபாடிநின்றார் பாங்கிமாரே-அது
கேட்டுமதிமயங்கினேன் பாங்கிமாரே 19
கீழ்மைகுறியாமலென்னைப் பாங்கிமாரே-மனக்
கேண்மைகுறித்தாரேயென பாங்கிமாரே 20
கீடனேயேனையும் பாங்கிமாரே-அடிக்
கேயடிமைகொண்டாரன்று பாங்கிமாரே 21
குற்றமெலாங்குணமாய் பாங்கிமாரே-கொள்ளுங்
கொற்றவரெனக்கொழுநர்காண் பாங்கிமாரே 22

குற்றமொன்றுஞ்செய்தறியேன் பாங்கிமாரே-என்னைக்
கொண்டுகுலம்பேசுவாரோ பாங்கிமாரே 23
குஞ்சிதப்பொற்பாதங்கண்டார் பாங்கிமாரே-உள்ள
குறையெல்லாந்தீருங்கண்டீர் பாங்கிமாரே 24
கூற்றுதைத்தபாதங்கண்டீர் பாங்கிமாரே-நாங்கள்
குடைக்கெல்லாங்குலதெய்வம் பாங்கிமாரே 25
கூறரியபதங்கண்டு பாங்கிமாரே-களி
கொண்டுநிற்கவிழைந்தேனே பாங்கிமாரே 26
கூடல்விழைந்தேனவரைப் பாங்கிமாரே-அது
கூடுவண்ணங்கூட்டிடுவீர் பாங்கிமாரே 27

## வெண்ணிலா.

தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே-ஒரு
தந்திரநீசொல்லவேண்டும் வெண்ணிலாவே 1
நாதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-அங்கே
நானும்வரவேண்டுகிறேன் வெண்ணிலாவே 2
சச்சிதாநந்தக்கடலில் வெண்ணிலாவே-நானுந்
தாழ்ந்துவிழவேண்டுகின்றேன் வெண்ணிலாவே 3
இராப்பகலில்லாவிடத்தே வெண்ணிலாவே--நானும்
இருக்கவெண்ணிவாடுகின்றேன் வெண்ணிலாவே 4
தேசநிறமாய்நிறைந்த வெண்ணிலாவே--நானுஞ்
சிவமயமதாய்விழைந்தேன் வெண்ணிலாவே 5
போதநிலையூடிருந்த வெண்ணிலாவே-மலப்
போதமறவேண்டுகின்றேன் வெண்ணிலாவே 6
ஆருமறியாமேலிங்க வெண்ணிலாவே-அரு
ளாளர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே 7
அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-யெங்க
ளையர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே 8
வேதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-மல
வேதையுளதுவேதுசொல்வாய் வெண்ணிலாவே 9
குண்டலிப்பால்நின்றிலங்கும் வெண்ணிலாவே-அந்த
குண்டலிப்பால்வேண்டுகின்றேன் வெண்ணிலாவே 10
ஆதியந்தமென்றுரைத்தார் வெண்ணிலாவே-அந்த
ஆதியந்தமாவதென்ன வெண்ணிலாவே 11
வித்திலாமலேவிளைந்த வெண்ணிலாவே-நீதான்
விளைந்தவண்ணமேதுசொல்வாய் வெண்ணிலாவே 12
முப்பொருளுமொன்றதென்பார் வெண்ணிலாவே-அந்த
மூன்றுமொன்றாய்முடிந்ததென்ன வெண்ணிலாவே 13
நானதுவாய்நிற்கும்வண்ணம் வெண்ணிலாவே-ஒரு
ஞானநெறிசொல்லுகண்டாய் வெண்ணிலாவே 14

ஞானமாய்விளங்கும் வெண்ணிலாவே-என்னை
நானறியச்சொல்லுகண்டாய் வெண்ணிலாவே 15

வாசிவாசியென்றுரைத்தார் வெண்ணிலாவே-அந்த
வாசியென்னபேசுகண்டாய் வெண்ணிலாவே 16

ஐந்தலைப்பாம்பாட்டுகின்றார் வெண்ணிலாவே-அவர்
அம்பலத்தினின்றதென்ன வெண்ணிலாவே 17

ஒரெழுத்திலேர்துண்டென்பார் வெண்ணிலாவே-அது
ஊமையெழுத்தாவதென்ன வெண்ணிலாவே 18

அம்பலத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடுகின்றவண்ணமென்ன வெண்ணிலாவே 19

அந்தரத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடும்வகையெப்படியோ வெண்ணிலாவே 20

அணுவிலணுவாயிருந்தார் வெண்ணிலாவே-எங்கு
மாகிநின்றவண்ணமென்ன வெண்ணிலாவே 21

அண்டபகிரண்டமெல்லாம் வெண்ணிலாவே-ஐயர்
ஆட்டமென்றுசொல்வதென்ன வெண்ணிலாவே 22

அம்பலத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-என்னை
ஆட்டுகின்றாரிப்பரத்தே வெண்ணிலாவே 23

திருச்சிற்றம்பலம்.

---

3416

## காட்சிக்கண்ணி.

சாமா - சாப்புதாளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி. 1

சோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி அம்மா
வீதியுண்டாச்சுதடி 2

வீதியிற்சென்றேனவ் வீதிநடுவொரு
மேடையிருந்ததடி அம்மா
மேடையிருந்ததடி. 3
மேடையிலேறினேன் மேடைமேலங்கொரு
கூடமிருந்ததடி அம்மா
கூடமிருந்ததடி 4
கூடத்தைநாடவக் கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடமிருந்ததடி 5
ஏழ்நிலைக்குள் ளிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வேனடி அம்மா
என்னென்றுசொல்வேனடி. 6
ஓர்நிலைதன்னி லொளிர்முத்துவெண்மணி
சேர்நிலமாச்சுதடி அம்மா
சேர்நிலமாச்சுதடி.. 7
பாரோர்நிலையிற் கருநீலஞ்செய்ய
பவளமாச்சுதடி அம்மா
பவளமாச்சுதடி. 8
மற்றோர்நிலையில் மாகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி அம்மா
மாணிக்கமாச்சுதடி 9
பின்னோர்நிலையிற் பெருமுத்துவச்சிரப்
பேர்மணியாச்சுதடி அம்மா
பேர்மணியாச்சுதடி 10
வேறோர்நிலையில் மிகும்பவளத்திரள்
வெண்மணியாச்சுதடி அம்மா
வெண்மணியாச்சுதடி. 11
புகலோர்நிலையிற் பொருந்தியபன்மணி
பொன்மணியாச்சுதடி அம்மா
பொன்மணியாச்சுதடி. 12
பதியோர்நிலையிற் பகர்மணியெல்லாம்
படிகமதாச்சுதடி அம்மா
படிகமதாச்சுதடி. 13

ஏழ்நிலைமேலே யிருந்ததோர்தம்ப
மிசைந்தபொற்றம்பமடி அம்மா
மிசைந்தபொற்றம்பமடி. 14

பொற்றம்பங்கண்டேறும் போதும்நான்கண்ட
புதுமையென்சொல்வேனடி அம்மா
புதுமையென்சொல்வேனடி 15

ஏறும்போதங்கே யிருந்தவகைசொல்ல
வென்னாளவல்லவடி அம்மா
வென்னாளவல்லவடி 16

ஆங்காங்கேசத்திக ளாயிரமாயிர
மாகவந்தார்களடி அம்மா
ஆகவந்தார்களடி. 17

வந்துமபக்க மயங்காமல்நானருள்
வல்லபம்பெற்றேனடி அமமா
வல்லபம்பெற்றேனடி. 18

வல்லபத்தாலந்த மாதம்பத்தேறி
மணிமுடிகண்டேனடி அம்மா
மணிமுடிகண்டேனடி. 10

மணிமுடிமேலோர் கொடுமுடிநின்றது
மற்றதுகண்டேனடி அம்மா
மற்றதுகண்டேனடி 29

கொடுமுடிமேலாயிரத் தெட்டுமாற்றுப்பொற்
கோயிலிருந்ததடி அம்மா
கோயிலிருந்ததடி. 21

கோயிலைக்கண்டங்கே கோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி அம்மா
கூசாதுசென்றேனடி 22

கோபுரவாயிலுட் சத்திகள்சித்தர்கள்
கோடிபலகோடியடி அமமா
கோடிபலகோடியடி. 23

ஆங்கவர்வண்ணபவெள் வண்ணம்செவ்வண்ணமுன்
ஐவண்ணமாகுமடி அமமா
ஐவண்ணமாகுமடி. 24

அஞ்சவரெல்லாமிங் காரிலவரென்னவு
மப்பாலேசென்றனடி அம்மா
அப்பாலேசென்றனடி. 25

அப்பாலேசென்றேனங் கோர்திருவாயிலில்
ஐவரிருந்தாரடி அம்மா
ஐவரிருந்தாரடி 26

ம்ற்றவர்நின்று வழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி அம்மா
மணிவாயிலுற்றேனடி 27

எண்ணுமவ்வாயிலிற் பெண்ணோடாணாக
விருவரிருந்தாரடி அம்மா
இருவரிருந்தாரடி 28

அங்கவர்காட்ட வணுகத்திருவாயில்
அன்பொடுகண்டேனடி அம்மா
அன்பொடுகண்டேனடி. 29

அத்திருவாயிலி லானந்தவல்லியென்
றம்மையிருந்தாளடி அம்மா
அம்மையிருந்தாளடி. 30

அம்மையைக்கண்டே னவளருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி அம்மா
அமுதமுமுண்டேனடி. 31

தாங்குமவளரு ளாலேநடராஜர்
சந்நிதிகண்டேனடி அம்மா
சந்நிதிகண்டேனடி. 32

சந்நிதியிற்சென்று நான்பெற்றபேறது
சாமிபறிவாரடி அம்மா
சாமிபறிவாரடி. 33

வானத்தின்மீது மயிலாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயிலகுயிலாச்சுதடி. 34

துள்ளலைவிட்டுத் தொடங்கினேன்மன்றுடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி. 35

சாதிச்சமயச் சடங்கைவிட்டேனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி. 36

பொய்யையொழித்துப் புறப்பட்டேன்மன்றூடும்
ஐவரைக்கண்டேனடி அக்கச்சி
ஐவரைக்கண்டேனடி. 37

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி. 38

திருச்சிற்றம்பலம்.

---

## எழுத்தறியும்பெருமான்மாலை.

### கொச்சகக் கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைமயங்கித்தியங்குகின்றநாயேனை
முந்தைவினைதொலைத்துன்மொய்கழற்காளாகாதே
நிந்தையுறநோயணிகழுவைத்தநீதிபதோ
வெந்தைநீயோர்ந்தெழுத்தறியும்பெருமானே. 1

மத்தனைவன்னெஞ்சகனைவஞ்சகனைவன்பிணிகொள்
பித்தனைவீணாட்போக்கும்பேயனைநாயேனை
முத்தனையாயுன்றன்முளரித்தாட்காளாக்க
வெத்தனைநாட்செல்லுமெழுந்தறியும்பெருமானே. 2

நன்னெறிசேரன்பர்தமைநாடிடவுநின்புகழின் [கு
சென்னெறியைசேர்ந்திடவுஞ்செய்தாயெனக்குனக்
முன்னறியேன்பின்னறியேன்மூடனேன்கையாறிங்
கென்னறிவேனையாவெழுந்தறியும்பெருமானே. 3

மைப்பிடியுங்கண்ணார்மயலுழக்கச்செய்வாயோ
கைப்படியவுன்றனகழல்கருதச்செய்வாயோ
விப்படியென்றப்படியென்றன்னறிவேனுஞ்சித்த
மெப்படியோவையாவெழுந்தறியும்பெருமானே. 4

நில்லாவுடம்பைநிலையென்றுநேசிக்கும்
பொல்லாதநெஞ்சம்புலையனேனிவ்வுலகிற்
சொல்லாமனேயாமற்சோர்வுற்றலையுமல்லை
லெல்லாமறிவாயெழுத்தறியும்பெருமானே. 5

நீதறிவேனன்கணவஞ்செய்பேன்வீணாட்போக்கும்
வாதறிவேன்வஞ்சகனேன் வல்வினையேன்வாய்மையி
ரூதறிவேன்மாலயனுஞ்சொல்லறியநின்பெருமை[யே
யாதறிவேனையாவெழுத்தறியும்பெருமானே. 6

மாறுதவன்பிணியானமாழாழ்ந்துநெஞ்சயர்ந்தே
கூறுதலுன்பக்கொடுங்கடற்குள்வீழ்ந்தபடியே
ஞூறுதாற்றியமுகின்றேனின்செவியி
லேறுதோவையாவெழுத்தறியும்பெருமானே. 7

உண்ணுடும்வல்வினையாலேயாப்பிணியிமூழ்ந்து
புண்ணாகநெஞ்சப்புழுங்குகின்றேன்புண்ணியனே
கண்ணாளாவுன்றன்கருணைபெனக்களிக்க
வெண்ணுயோவையாவெழுத்தறியும்பெருமானே. 8

புன்செய்கைமாறுப்புலையமடமங்கையர்தம்
வன்செய்கையாலேமயங்குகின்றவஞ்சகனேன்
கொன்செய்கைமாறுதகூற்றன்வருவானே
லென்செய்வேனையாவெழுத்தறியும்பெருமானே. 9

சங்குடையான்றுயனையான்றன்முடியுங்காண்பரி
தாங், கொங்குடையகுன்றை குளிர்சடையாய்கோ
தையொரு, பங்குடையாயேழைமுகம்பாராதுதள்ளி
விட்டா, லெங்கடையேனையா வெழுத்தறியும் பெரு
மானே. 10

மன்றினிடைநடஞ்செய்மாணிக்கமாமலையே
வென்றிமழுக்கையுடையவித்தகனேயென்றென்று
கன்றியனார்ந்தழுமெல்கண்ணீர்துடைத்தருள
வென்றுவருவாயெழுத்தறியும்பெருமானே 11

மன்னளவிற்சோதிமணிபோல்வாய்மாதவத்தோர்
தென்னளவும்வேணிச்சிவனேயெனவொருக்காற்

சொன்னவளவிற்சொன்னவர்தந்துன்பமொழிப்பா
னென்னளவிறகாணே னெழுத்தறியும்பெருமானே.

மின்போல்வாரிச்சையினல்வெம்புகின்றேனுனுந்
தன்போல்வாயென்னீன்ற தாய்போலவாய் சார்ந்து
ரையாப், பொன்போல்வாய்நின்னருளிப்போதடியே
ன்பெற்றேனே, லென்போல்வாரில்லையெழுத்தறியும்
பெருமானே. 13

பூமாந்தும்வண்டெனநின் பொன்னருளைப்புண்ணியர்
டாமாந்திநின்னடிக்கீழ்சார்ந்துநின்றுரையேயோகான்க
காமாந்தகாரமெனுங்கள்ளுண்டுகண்மூடி
பேமாந்தேனெற்றுமெழுத்தறியும்பெருமானே. 14

பன்னருமிப்பார்நடையிற்பட்டுழன்றபாதகனேன்
றுன்னியநின்பொன்னடியைச்சூழாதேனாயிடினும்
புன்னிகரேன்குற்றம்பொறுக்கப்பொறுப்புனக்கே
யென்னருமைத்தாய்நீ யெழுத்தறியும் பெருமானே.

வீட்டுக்கடங்காவிளையாட்டுப்பிள்ளையெனத்
தேட்டுக்கடங்காததிமனத்தாலாந்துயரம
பாட்டுக்கடங்காநின்பத்தாடிப்புகழ்போ
லேட்டுக்கடங்காதெழுத்தறியும்பெருமானே. 16

பன்னுமனத்தாற்பரிசிழக்கபாதகனேன்
றன்னுமலவெங்கதிரோன்சூழ்கின்றகோடையினு
னின்னருணீர்வெட்டுநிலைகலங்கிவாடுகின்றே
னின்னுமறியாயோவெழுத்தறியும்பெருமானே. 17

கலைகிராககடையமனம்போகாநெறியிற்
புல்லைமதித்தையோமைம்பூவிழுந்தபொய்யடியே
னெல்லைபடுகின்றவொருவதனை தனக்கோ
ரெல்லையறியேனெழுத்தறியும்பெருமானே. 18

பொன்னைமதித்தையாநின்பொன்னடியைப்போற்றுத
கன்னிகருநெஞ்சாற்கலங்குகின்றகைதவனே
னின்னலுழக்கின்றவேழைகட்குவேழைகண்டா
யென்னைவிடாதேயெழுத்தறியும்பெருமானே. 19

மாசுவரோவென்னுமலக்கடலில்வீழ்ந்துலகோ
ராசுவரோவென்னவலையேனையாளாமேல்
கூசுவரோகைகொட்டிக்கூடிச்சிரித்தடியா
ரேசுவரேயொற்றியெழுத்தறியும்பெருமானே. 20

ஊர்சொல்வேன்பேர்சொல்வே னுத்தமனேநின்றிருத்
சீர்சொல்வேனென்றனைச்சேர்க்காதகற்றுவையே [தா
னேர்சொல்வாயுன்றனக்குநீதியிதல்லவென்றே
யார்சொல்வாரையாவெழுத்தறியும்பெருமானே 21

நீக்கமிலாமெய்யடியர்நேசமிலாப்பொய்யடியே
னூக்கமிலாநெஞ்சத்திருட்டகலச்செய்வாயே
றாக்கமிலாவானந்தத்தூக்கமன்றிமற்றுமிங்கோ
ரேக்கமிலேனொற்றியெழுத்தறியும்பெருமானே. 22

போகின்றவஞ்சரைப் போக்கியுன்றன் பொன்னடிக்
ளாகின்றமேலோரடிவழுத்தாயேற்குப் [கா
பாகின்றனிச்சுவையிற்பாவகாநின்னருளை
யீகின்றதென்றோவெழுத்தறியும்பெருமானே. 23

ஊழையசுற்றவுளவறியாப்பொய்யனிவன்
பீழைமனநம்மைப்பெறாதமனங்கொடிய [ன்
தாழையெனவெண்ணியென்னைத் தள்ளிவிட்டாலெ
னேழைநானொற்றியெழுத்தறியும்பெருமானே. 24

மடுக்கமுடியாமல்விருட்டிற்சென்றமனம்
கடுக்கமுடியாப்புலனாற்கட்டிச்சமக்கவைத்த
தொடுக்கமுடியாதவன்பச்சுமையையினி
யெடுக்கமுடியாதேயெழுத்தறியும்பெருமானே. 25

முள்ளளவுநெஞ்சமுழுப்புலையமாதர்களாங்
கள்ளளவுநாயிற்கடைப்பட்டவென்றனக்கு
வள்ளளவுமன்பரிக்குதவுமுன்றாட்கன்பொருசிற்
றெள்ளளவுமுண்டோ வெழுத்தறியும் பெருமானே.

பண்ணமுடியாப்பரிபவங்கொண்டிவ்வுலகி
லெண்ணமுடியாநலங்கருதிவாடுகின்றே

னுண்ணமுடியாவமுதாமுன்னையன்றிஎவ்வெவர்க்கு
மெண்ணமுடியாதேயெழுத்தறியும்பெருமானே. 27

வெங்கொளித்தேன்போன்றவினையாலவெதும்பியன
மங்கொளிக்காதுன்னையழைத்தழுதுவாடுகின்றே
னிங்கொளிக்காரஞ்சமுண்டவெண்ணருமையப்பாநீ
எங்கொளித்தாயொற்றியெழுத்தறியும்பெருமானே.

பித்தனைக்குங்காமப்பெரும்பேய்மயக்குமயல்
வித்தனைத்தாமாவாணம்பொய்விறுமமூக்காறுசினங்
கொத்தனைத்தாம்வஞ்சங்கொலைமுசலாம்பாவங்க
ளித்தனைக்குநான்காலனெழுத்தறியும்பெருமானே. 29

ஒல்லைபோநஞ்சனைத்துமுண்டதயாநிதிநீ
யல்லையோநின்றிங்கயர்வேன்முன்வந்தொருசொற்
சொல்லையோவொற்றியூர்தூயதிருக்கோயிலுனீ
யில்லையோவையாவெழுத்தறியும்பெருமானே. 30

நினையுடையாய்நீயன்றிநேடிலெங்குமில்லாதாய் [மே
மனையுடையார்மக்களெனுமவாழ்க்கையிடைபட்டவ
யுனையுடையானென்றிங்கெனையாள்வதுன்கடனே
எனையுடையாய்யொற்றியெழுத்தறியும்பெருமானே.

திருச்சிற்றம்பலம்

---

## திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்.

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

தாயின்மேவியதற்பரமேமுல்லை
வாயின்மேவியமாமணியேயுன்றன்
கோயின்மேவினேகோமலர்ததாடொழா
தேயின்மேவிருந்தனனென்னையே 1

தில்லைவாய்ந்தசெழுங்கனியேதிரு
முல்லைவாயின்முதற்சிவமூர்த்தியே
தொல்லையேனுனறன்றாயதிருக்கோயிலி
னெல்லைசேரவின்றேதவஞ்செய்ததே. 2

வளங்கொளுமுல்லைவாயிலின்மேவிய
குளங்கொளுங்கட்குருமணியேயுனை
யுளங்கொளும்படியுன்றிருக்கோயிலிக்
களங்கொணெஞ்சினன்கண்டுளங்கண்டதே. 3

மலைவிலாமுல்லைவாயிலின்மேவிய
விலையிலாமணியேவிளக்கேசற்றுனை
கொலையிலாதவர்கூடுநின்கோயிலின்
றலைவிலாவத்தவமென்கொல்செய்வதே. 4

சீர்சிறக்குந்திருமுல்லைவாயிலி
லேர்சிறக்குமியன்மணியேகொன்றைத்
தார்சிறக்குஞ்சடைக்கனியேயுன்ற
னூர்சிறக்கவுறுவதெவ்வண்ணமே. 5

சேற்கொள்பொய்கைத்திருமுல்லைவாயிலிற்
பாற்கொள்வண்ணப்பரஞ்சுடரேவிடை
மேற்கொள்சங்கரனேவிமலாவுன்றன்
காற்கொளன்பர்கலங்குதலன்றதோ. 6

வண்ணமாமுல்லைவாயிலின்மேவிய
வண்ணலேயமுதேயரசேநுதற்
கண்ணனேயுனைக்காணவந்தோர்க்கெலா
நண்ணருந்துயர்நல்குதலன்றதோ. 7

மண்ணினோங்கிவளர்முல்லைவாயில்வாழ்
கண்ணுண்மாமணியேகரும்பேயுனை
யெண்ணுமன்பரிழிவடைந்தாலது
டண்ணலின்னருள்பாரிடைவாழ்கவே. 8

தீதிலாத்திருமுல்பருங்குன்றமே
கோதிலாதகுணப்பெருக்குன்றமே
வாதிலாதுனைவாழ்த்தவந்தோர்தமை
யேதிலாரென்றிருப்பதுமென்கொலோ. 9

தேசுலாவியசீர்முல்லைவாயில்வாழ்
மாசிலாமணியேமருந்தேசற்றுங்
கூசிடாமனின்கோயில்வந்துன்புகழ்
பேசிடாதபிழைபொறுத்தாள்வையே 10

திருச்சிற்றம்பலம்.

---

## நடராஜர்கும்மி.

திருச்சிற்றம்பலம்.

கும்மியடிப்பெண்கள்கும்மியடியிரு
கொங்கைகுலுங்கவேகும்மியடி.
நம்மையாளும்பொன்னம்பலவாணனை [டி.
நாடிகும்மியடியுங்கடிபதம்பாடிக்கும்மியடியுங்க

காமமகற்றியதூயனடிசிவ
காயசௌந்தரிநேயனடி
யாமறையோதுசெவ்வாயனடிமணி
மன்றெனுஞானசகாயனடி. 2

ஆனந்தத்தாண்டவராஜனடிநமை
யாட்கொண்டருளியதேவனடி
வானந்தமாமலைமங்கைமகிழ்வடி.
வாளனடிமணவாளனடி. 3

கல்லைகனிவிக்குஞ்சித்தனடிமுடி
கன்னகக்கருளியகர்த்தனடி
தில்லைச்சிதம்பரசித்தனடிதேவ
சிங்கமடியுயர்தங்கமடி. 4

பெண்ணொருபால்வைத்தமத்தனடிசிறு
பிள்ளைகறிகொண்டபித்தனடி

பண்ணிநமக்கருளத்தனடிமிக
நல்லனடியெல்லாம்வல்லனடி. 5

அம்பலத்தாடல்செய்யையனடியன்ப
ரன்புக்கெளிதருமெய்யனடி
இன்பமுடிக்கனிதூயனடிசுயஞ்
சோதியடிபரஞ்சோதியடி. 6

திருச்சிற்றம்பலம்.

சிவநாமாவளித்திரட்டு முற்றிற்று.



நற்றமிழ்விலாசம் பிரெஸ், புரசை, சென்னை. 1919

